07 JUN 1998

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 24 (07-06-1998) ஞாயிற்றுக்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 163

## வாஜ்பாய் இலங்கை வரும்போது 400 'கறுப்புப் பூனைகள்' பாதுகாப்பு

### 15 பேர் கொண்ட இந்தியக்குழு தற்பொழுது கொழும்பில்

கொழும்பு, ஜூன் 7

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வர இருக்கும் இந்தியப் பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாய்க்கு பாதுகாப்பு அளிப்பதற்காக 400 பேரைக் கொண்ட ''கறுப்புப் பூனைகள்'' படை இலங்கை வர உள்ளது.

இது தொடர்பான முன் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஏற்கெனவே 15 பேரைக்கொண்ட ''கறுப்புப்பூனை'' படை அதிகாரிகள் கொழும்புவந்துள்ளனர்.

இவர்கள் வாஜ்பாயின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கையின் புலனாய்வு அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்த உள்ளனர்.

இந்தியாவால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அணு வெடிப்புப் பரிசோதனைகளுக்குப் பின்னர் இந்தியாவின் உயர் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களை அடுத்தே வாஜ்பாய்க்கான பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய உயர் அரசியல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கதிர்காமர் நேரில் செல்கிறார்

கொழும்பு, ஜூன் 7

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அடுத்த மாதம்கொழும்பில் நடைபெறஇருக்கும் 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்த நாடுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பிதழ்களை அவர் நேரில் கையளிக்க உள்ளார். (இ-9)

## மாங்குளம் பகுதியில் நேற்றும் மோதல்கள்

### புலிகளுக்கு இழப்பு என அரச தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

மாங்குளத்துக்கு தென்மேற்கே நேற்று படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக பலாலி படைத் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8-00 மணி அளவில் இந்த மோதல்இடம் பெற்றதாகவும் —

மோதலில் 6 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் —

படையினர் மேலும் வடக்கு நோக்கி நகர்ந்த போது புலிகளின் மூன்று நிலைகள் மீது பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

**முச்சந்திமுரளி**



புலிகளும் சிங்கங்களும் உள்ள இடத்துக்கு பூனைகளை அனுப்புகினம்......!

## ஒரே இரவில் மூன்று மின்மாற்றிகள் அக்கரைப்பற்றுப் பகுதியில் தகர்ப்பு

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒரே இரவில் 3 மின் மாற்றிகள் இனந்தெரியாத நபர்களால் தகர்க்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் இந்த மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் சுமார் 750 குடும்பங்களின் மின் விநியோகம் துண்டிக்கப் பட்டுள்ளது. சேதத்தின் பெறுமதி சுமார் 15 இலட்சம் ரூபா என இலங்கைமின்சாரசபை தெரிவித்தது.

அதே சமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் புனானைக்கும் வெலிக்கந்தைக்கும் இடையில் 6 மின் கோபுரங்களின் இன்சுலேட்டர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான லக்ஸபானா மின் விநியோகம் நேற்று முன்தினம் முதல் துண்டிக்கப்பட்டது. எனினும் மின் விநியோகம் நேற்று நண்பகல் வழமைக்குத் திரும்பியது. (இ-21)

## பிரபாவுடனான கடிதத்தொடர்புகள் குறித்து ஜனாதிபதி விளக்கம்

### ஐ.தே.க. எம்.பியின் குற்றச்சாட்டுக்குப் பதில்

கொழும்பு, ஜூன் 7

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தான் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள், தனக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இனப் பிரச்சினை குறித்த உடன்பாடு ஏற்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரேயே இடம்பெற்றதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

கடந்த வியாழன் இரவு சுயாதீன தொலைக் காட்சி ஒன்றில் ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாசேனா கொடிதுவக்கு வெளியிட்ட கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கை வந்திருந்த பிரிட்டனின் முன்னாள் பிரதி அமைச்சர் லியம் பொக்ஸின் முயற்சியால் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படகுகளுடன் மீனவர்கள் உப்பாறுபகுதியில்கடத்தல்

திருகோணமலை மாவட்டம் உப்பாறு பகுதியில் 40 மீனவர்களுடன் 5 படகுகள் இனந்தெரியாதோரால் கடத்தப் பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளே படகுகளையும் மீனவர்களையும் கடத்தியதாகவும் —

பின்னர் 39 மீனவர்களையும், ஒரு படகையும் அவர்கள் விடுவித்தனர் எனவும் —

4 படகுகளையும் ஒரு மீனவரையும் விடுவிப்பதானால் 4 இலட்சம் ரூபா தர வேண்டும் என அவர்கள் கேட்டிருப்பதாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகத்தை மேற்கோள்காட்டி ரூபவாகினி நேற்றிரவு அறிவித்தது. (இ-7)

### லண்டனில் நடத்தப்பட்ட

## புலி எதிர்ப்புப் பேரணியில் தமிழர் எதிர்ப்புக் கோஷம்

கடந்த மாதம் 17 ஆம் திகதி லண்டனில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட பேரணி இறுதியில் தமிழர் எதிர்ப்புப்பேரணியாக மாறியதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேரணியில் எடுத்துச் செல்லப்பட்ட சில பதாகைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான வாசகங்களைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக ஒருபடி மேலே சென்று தமிழர்களுக்கு எதிரான வாசகங்களைக் கொண்டிருந்தன எனவும —

பேரணியில் கலந்து கொண்ட கலப்பு குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள் சிலரை பேரணியில் சென்ற சிங்களத் தீவிரவாதிகள் விரட்டும் நிலை உருவானதெனவும் — லண்டனில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (10)

## அவசர வேண்டுகோளை அடுத்துபலர் இரத்ததானம்

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு மத்திய இரத்த வங்கி தொலைக்காட்சிமூலம் பொதுமக்களுக்கு விடுத்த அவசர வேண்டுகோளை அடுத்து பெரும் எண்ணிக்கையானோர் இரத்த தானம் வழங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களை விட தற்போது பெரும் தொகையாக இரத்தம் தேவைப்பட்டதனாலேயே மத்திய இரத்த வங்கி இந்த வேண்டுகோளை விடுவித்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களிடம் இருந்து இரத்தம் பெறும் நோக்குடன் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவில் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## நமசிவாயம் கொலை தொடர்பாக இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட உப தலைவரும் யாழ். வர்த்தகர் சங்க முன்னாள் செயலாளருமான நமசிவாயத்தின் கொலை தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

நவசிவாயத்தின் மரண விசாரணை நேற்று முற்பகல் 11 மணியயவில் நடத்தப்பட்டு சடலம் அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பதில் நீதிவான் க.கேசவன் முன்னிலையில் நடத்தப்பட்ட இந்த மரண விசாரணையின் போது, சந்தேகத்தில் இருவரைத் தாம் கைது செய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# தீ மிதிப்பு

கந்தர்மடம், அரசடி வீதி

## அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில்

வைகாசி விசாகம்

08-06-98 திங்கட்கிழமை வைகாசித் திங்கள் 25 ஆம் நாள் நடைபெறவுள்ளது.

மக்கள் துயர்தீர, நோய் பிணி அகல, நாட்டில் அமைதி வேண்டி அம்பாளின் திருவருள் வாக்கால் இத்தீமிதிப்பு நடைபெறவுள்ளது.

அன்று காலை 9-00 மணிக்கு பூசை பொங்கல்
10-00 மணிக்கு தீ மூட்டல்
மாலை 4-00 மணிக்கு அம்பாள் தீ மிதிப்பு நடைபெறும்.


பின்னர் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று பூசை நடைபெறும்.

அம்பாள் அடியார்கள்
ஆலய தர்மகர்த்தா.

(56662)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 19 |
| 10 | 05 |
| 1926 | 1997 |

திருமதி
**பொன்னுத்துரை அன்னலெட்சுமி**

திதி: **07 – 06 – 1998**

ஓராண்டு சென்றும் அம்மா உங்கள் பிரிவுத்துயர் ஆறவில்லை; எனினும் பல ஆண்டு சென்றாலும் உங்கள் பாசம் நிறை அன்பை மறவோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

65, ராணிவீதி,
நல்லூர்.

(56663)

---

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி நமசிவாயம்

எமது வணிகர் கழக முன்னாள் செயலாளரும், தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும், சிவகுமார் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய சின்னத்தம்பி நமசிவாயம் அவர்கள் 05-06-98 இல் அகால மரணமானதையிட்டு அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் வணிகர் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

குறிப்பு:

சகல யாழ் வர்த்தக உரிமையாளர்களும் இன்று (07 – 06 – 98) தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி காலை10 மணிக்கு அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி/3960)

---

A/L 98
முகாமைக் கணக்கீடு
ஆரம்பம்: Mon. 8/6 –4p.m.
Mr. பாலவாசன்

G. A. Q. '98
பொருளியல்
Paper Class
ஆரம்பம்: இன்று
Sun. 1-00 p.m.
Mr. இராஜேஸ்வரன்
B. Com.
SHAMROCK
(56690)

---

## ஆங்கிலம் தபால் மூலம்

தொழில் புரிவோர், தேடுவோர், மாணவர் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் பயிற்றப்படுகிறது. முத்திரை, சுய விலாசமிட்ட உறையுடன் எழுதவும்,

**LAMPS LTD,**
76, Mahaveethiya,
( grand street )
Negombo.
(56504)

---

நெல்லியடி
## மஹாத்மா
வெண் திரையில்
07 - 06 - 98 முதல்
பிரசாந்த் - ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
( நேரடி CD யில் )
காட்சிகள்:- 10-30, 2-30
( பழைய நேரப்படி )
(சி/3959)

---

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
சிவாஜி - சாவித்திரி
ஜெமினி, M.N. ராஜம்
நடித்த
**பாசமலர்**
(நெஞ்சை உருக்கும் காட்சிகள் நிறைந்த குடும்பச் சித்திரம்)
நேரம்:- 10-00, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56651)

---

## நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
07-06-98 ஞாயிறு
அகல வெண் திரையில்
இன்று முதல்
விஜய் - சுவாதி
ரகுவரன் நடித்த
**செல்வா**
காட்சிகள்:- 10-30, 2-30
(56681)

---

## ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
கார்த்திக், சௌந்தர்யா
நடித்த
**பொன்னுமணி**
அடுத்த வெளியீடு:
**பாட்ஷா**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3962)

---

# மரண அறிவித்தல்கள்

செல்வி
## தவமணிதேவி தம்பையா

அளவெட்டி பத்தர்கடவை—கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தவமணிதேவி தம்பையா (மலர்) 05-06-1998 வெள்ளிக்கிழமை நள்ளிரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை தம்பையா இராசமணி ஆகியோரின் மூத்தமகளும், திரு. த. பூபாலசிங்கம், திரு. த. தனபாலசிங்கம் (ஜேர்மனி), திருமதி சு. புஸ்பராணி, திருமதி ஜெ. தயாமணிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், திருமதி பூ. செல்வராணி (மாதகல்), திருமதி த. சாந்தினி (வவுனியா), திரு க. சுப்பிரமணியம் (கோண்டாவில்—வவுனியா, N.S.K. சுருட்டுத்தொழில் அதிபர்), திரு. இ. ஜெயராஜரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சு. தினேஷ்குமார், சு. பிரசாத்குமார், சு. உஷாயினி, சு. மனோஜ்குமார், ஜெ. ஜெயங்கா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், பூ. நிரஞ்சனா, பூ. மிதிலா, த. சஞ்சய்காந், த. நிமலகாந் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்காலிக வதிவிடத்தில் 06-06-98 சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்!
த. பூபாலசிங்கம்
(சகோதரன்)

குளங்கரை லேன்,
அம்மன் கோயிலடி, கோண்டாவில்.

(56676)

---

## சின்னத்தம்பி நமசிவாயம்

(உரிமையாளர், சிவகுமார் ஸ்ரோர்ஸ்)
282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காரைநகர் கப்பம்புலத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நமசிவாயம் 5 – 06 – 1998 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னப்பிள்ளையின் மகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், சிவகுமார் (கொழும்பு), குகனேசன் (ஹொலண்ட்), பிரபாகரன் (ஸ்ரான்லிக் கல்லூரி (A/L 96), சிவானந்தராசா (ஸ்ரான்லிக் கல்லூரி A/L 97), தனலெட்சுமி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி A/L 2000) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை இராசம்மாவின் அன்பு மருமகனும், இராசம்மா, சரஸ்வதி, பரமநாதன் (நாதன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பொன்னம்பலம், தில்லையம்பலம், சியாமளா, தியாகராசா, கனகரெத்தினம், நடராசா, மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (7-06-1998) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு 20/11, வைரவர் கோயில் ஒழுங்கையில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. பராசக்தி
(மனைவி)

இல. 20/11, வயிரவர் கோயில் ஒழுங்கை,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(56683)

---

## திருமதி காமாட்சிப்பிள்ளை செல்லத்துரை

(வேலணை கிழக்கு, வங்களாவடி)

வேலணை கிழக்கு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 44/ 7, சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சிப்பிள்ளை செல்லத்துரை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் செல்லத்துரையின் அருமை மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் மருமகளும், சிவபுரநாதன் (கிருஸ்ணாஸ் ஸ்ரோர்ஸ், கொழும்பு), மயூரகிரிநாதன் (சாரதா டிறேட் சென்ரர், கொழும்பு), ஜெகதீஸ்வரநாதன் (முன்னாள் அதிபர், ஜேர்மனி), அருணகிரிநாதன் (முன்னாள் கணக்காளர், புகையிரதப்பகுதி, கனடா), பரஞ்சோதிநாதன் (வேல் முருகன் ஸ்ரோர்ஸ், கொழும்பு), சிவஞானவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசலெட்சுமி, காலஞ்சென்ற இந்துமதி, மஞ்சுளா, சுமதி (ஜேர்மனி), ஜெயராணி (முன்னாள் ஆசிரியை, கனடா), வாசுகி, குமரேஸ்வரநாதன் (அதிபர், யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வகரன் (ரஷ்யா), சுபாஸ்கரன், ரமேஸ்கரன், கார்த்யாயினி, கமலகரன், மலரவன், கஸ்தூரி, செந்தூரி, தனுஷா, ஹம்சா, வாகீசன், கௌரீசன் நிலானி, ஜனனி, திலக்ஷி ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, செல்லப்பா, சிவஞானபிள்ளை, ஆச்சிமுத்து, பசுபதிப்பிள்ளை, செங்கமலம், முத்தம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னாச்சிப்பிள்ளை, சின்னத்தங்கம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-6-98) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. சிவபுரநாதன் (மகன்)
க. குமரேஸ்வரநாதன் (மருமகன்)

44/7, சங்கிலியன் வீதி, நல்லூர்.

(56655)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# உதயன்

## ஜனநாயகத்துக்கு சாவுமணி

போர்ச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கு அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கையில் பத்திரிகைத் தணிக்கை ஒன்றும் புதிய விடயமல்ல, நெருக்கடி நிலை காரணமாக மட்டுமன்றி அரசியல் நலன், அரசியல் லாபம் கருதிக்கூட மக்களுடைய தகவல் அறியும் உரிமை பல தடவைகள் பறிக்கப்பட்டது.

மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கும், பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் எவ்வித இடையூறும் விளைவிக்கப் போவதில்லை. அரசாங்க நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி—மறைப்பின்றி—நடைபெறும் என்று இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால் பத்திரிகைச் சுதந்திரத்தில், கருத்துச் சுதந்திரத்தில் கை வைக்கும், அதன் குரல்வளையைத் திருகும் போக்கை அது அடிக்கடி வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கைக்கொள்கிறது.

1996 ஆம் ஆண்டிலும், அரசு, பாதுகாப்புத்துறை சம்பந்தமான செய்திகளுக்குத் தணிக்கை விதித்திருந்தது. ஆனால் இம்முறை பூரண தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் போர் சம்பந்தப்பட்ட செய்திகளைப் பிரசுரிப்பதனை ஊடகங்கள் நினைத்தும் பார்க்க முடியாது!

இது மக்களை இருட்டில் அடைத்து விடுவதாகும். அரசாங்கம் உத்தியோக பூர்வமாகக் கூறும் தகவல்களையே படிக்க முடியும்; அறியமுடியும். அத்தகைய ஒரு நிலையில் வின்சென்ட் சேர்ச்சில் கூறியது போல முதலில் சாவது உண்மையாகவே இருக்கும்.

மேலும் பத்திரிகைத் தணிக்கை விதிக்கப்படும் போது மூத்த சிவில் அதிகாரி ஒருவரே தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படுவது வழமை. இம்முறை இராணுவத்தின் துணைப் பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். போர் சம்பந்தமாக மக்களுக்கு திரிக்கப்பட்ட தகவல்கள் சொல்லப்பட வேண்டும் என்பதில் அரசு எவ்வளவு அக்கறையாக உள்ளது என்பதனை இது எடுத்துக் காட்டுகிறது!

செய்தித் தடையின் பயனாக பொய்களும், வதந்திகளும் பெருகிப்பாதகமான விளைவுகளை உண்டாக்கும் என்றபக்கத்தை அரசு மறந்தமை அதன் பதற்றத்தைப் புலப்படுத்துகின்றது.

போரின் ஒரு சமரில் அரசுக்குப் படுதோல்வி ஏற்பட்டிருக்க வேண்டும்; அது பற்றிய தகவல்கள் கசிந்தால் சிங்களமக்கள் அரசு மீது வெறுப்புக் கொள்வார்கள்; போரை நிறுத்துமாறும் அவர்கள் கோரலாம்; மாகாண சபைத் தேர்தலிலும் அரசுக்குப் பாதக நிலையை உருவாக்கும். இவையே அரசின் பதற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

எப்படியோ, மக்களின் தகவல் அறியும் உரிமை முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்துக்கான முதலாவது சாவு மணி ஆகும்.

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

சந்நிதியான் ஆச்சிரமம் ஆண்டுதோறும் வைகாசித் பெரு விழாவிலே வழங்கி



வரும் விருது இம்முறை சிவ தமிழ்ச்செல்வி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு எதிர் வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 9 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணி தேசிகர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு 'ஞானபண்டித கலாவித்தகி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பார்.

(ஐ-8)

## நவாலிப் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

வலி. தென்மேற்கு, ஜூன் 7

நவாலி வடக்கில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரம் மட்டும் இப்பகுதியில் நான்கு திருட்டுச் சம்பவங்கள் நடந்தன.

நேற்று முன்தினம் இரவு புலவர் வீதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்து உடுபுடைவைகள், கோடரி, கத்தி போன்ற உபகரணங்கள் திருடப்பட்டன.

அதே வீதியில் கடந்த வியாழன் இரவும் மூவர் கொண்ட திருடர் கோஷ்டி ஒன்று வீடு ஒன்றினுள் புகுந்து ஜன்னல்கள், கதவுகளை அபகரிக்க முயன்ற போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டது. அவர்கள் மூவரும் நவாலி இராணுமுகாம் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வீட்டின் முன்பக்கத்தில் இருந்த வயோதிபப் பெண்ணை ஏமாற்றிவிட்டு பின்பகுதி ஊடாகவே இவர்கள் திருட்டு முயற்சியில் இறங்கினர்.

இதேவேளை—

வேறு மூன்று வீடுகளில் கூடுகளை உடைத்து கோழிகள் திருடப்பட்டுள்ளன. கூட்டை உடைக்கப் பயன்படுத்திய ஆயுதங்களை திருடர்கள் அவசரத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

திருடர்களின் கைவரிசைக்கு இப் பகுதி ஆலயங்களும் தப்பவில்லை.

நவாலி நாச்சிமார் ஆலயத்தில் ஏற்கனவே அம்மனின் பொட்டுத்தாலியும், மணிக்கூடும் திருடப்பட்டுள்ளன.

இதே ஆலயத்தில் மறுநாள் உண்டியல் பெட்டி திருடப்பட்டு பற்றைக்குள் போடப்பட்டிருந்ததாகவும் தர்மகர்த்தா சபைத் தலைவர் தெரிவித்தார்.

(ஐ-185)

## மாதாந்த கருத்தரங்கு

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் உப அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

'சமூகமேம்பாட்டுக்கான மனம்' என்றதலைப்பில் சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். சண்முகலிங்கன் உரையாற்றுவார்.

(ஐ)

## சிவகுமாரனின் சிலைக்கு அடிக்கல்

தியாகி சிவகுமாரனின் நினைவு தினத்தை ஒட்டி புளொட் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி கடந்த வெள்ளியன்று உரும்பிராயில் சிவகுமாரன் நினைவிடத்தில் நடைபெற்றது.

சிவகுமாரனின் சிலை அமைந்திருந்தஇடத்தில் புதிதாக வெண்கலச் சிலை ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல் அன்றைய தினம் நடுகை செய்யப்பட்டது.

தியாகி சிவகுமாரனின் சகோதரர் பொ. அரியரத்தினமும், திருமதி பராசக்தி அரியரத்தினமும் முதலில் சிலைக்கான அடிக்கல்லை நாட்டினர்.

யாழ். மாநகரசபையின் புளொட் உறுப்பினர் இருதயராஜன் தலைமையில் அங்கு நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் புளொட்டின் யாழ் மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், அமைப்பாளர் சுபத்திரன் ஆகியோர் உட்படப்பலர் உரையாற்றினார்.

(ஐ—5

## அந்தோனியார் சிலையை உடைத்து சங்கிலி திருட்டு

### நவாலியில் சம்பவம்

வலி. தென் மேற்கு, ஜூன் 7

நவாலி புலவர் வீதியில் அமைந்திருந்த அந்தோனியார் சிலை கடந்த வெள்ளி இரவு உடைக்கப்பட்டு அதிலிருந்த வெள்ளிச் சங்கிலி திருடப்பட்டிருக்கிறது.

சிலையை அபகரித்த திருடர்கள் சங்கிலியை திருடிய பின்னர் சிலையை உடைத்து அதன் பாகங்களை பல இடங்களிலும் வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் கவலையையும், விசனத்தையும் தோற்றுவித்துள்ளது.

அந்தோனியார் சிலைக்கு இப்பகுதி மக்கள் தினமும் விளக்கேற்றி வழிபட்டு வந்தனர்.

(ஐ-185)

## மாம்பழத்துடன் செல்லும் விமானப் பயணிகள்!

வடமராட்சி, ஜூன் 7

குடாநாட்டில் தற்போது மாம்பழ சீஸன். சந்தைகளில் தெருக்களில் எல்லாம் வகைவகையாக மாம்பழங்கள் காட்சி தருகின்றன.

மாம்பழங்கள் வெகுத்துள்ளதை அடுத்து இங்கிருந்து கொழும்பு செல்லும் விமானப் பயணிகள் தமது உறவினர் நண்பர்களுக்கு மாம்பழங்களையும் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது. அத்துடன் முருங்கைக்காயையும் பலர் தம்முடன் எடுத்துச் செல்வதைக் காணமுடிகிறது.

கொழும்பில் கறுத்தக்கொழும்பான் மாம்பழம் ஒன்று 25 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனையாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே கொழும்பு செல்லும் பயணிகள் தமது உறவினர்கள் நண்பர்களுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து மாம்பழங்களையும் அத்துடன் இங்கு மிக மலிவாகக் கிடைக்கும் முருங்கைக் காய்களையும் எடுத்துச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மாம்பழங்களை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டால் மாம்பழ வியாபாரிகளுக்கு அதிகளவு சந்தைவாய்ப்புக் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-173-6)

## தரிசு நிலங்களில் உழவு

அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் மக்கள் இடம்பெயர்வுக்குப் பின்னர் கைவிடப்பட்டு தரிசாக இருந்து வரும் பல வயற் காணிகள் உழவு இயந்திரங்கள் மூலம் உழுது பண்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆறு, ஏழு வருடகாலமாகப் பயிர்ச் செய்கை இன்றிப் பற்றைகள், காட்டுப் புற்கள் வளர்ந்து தரிசாக இந்த வயற் காணிகள் இருந்து வந்துள்ளன. இப் பகுதி விவசாயிகள் எதிர் வரும் காலபோக நெல விதைப்பை ஆவணி மாதப் பிற்பகுதியில் மேற் கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

(ஐ-135)

## வடமராட்சிப்பகுதியில்

## கால்நடைகளுக்கு 'கருங்காலி' நோய்?

### தடுப்பு நடவடிக்கை தீவிரம்

வடமராட்சி, ஜூன் 7

வடமராட்சிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு கருங்காலி நோய் ஏற்படாது தடுக்கும் பொருட்டு அவசர அவசரமாகதடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டுவருகின்றன.

இப்பிரதேசத்திலுள்ள கரணவாய் சோளங்கன் பகுதியில் கால்நடைகளுக்கு கருங்காலி நோய் இருபபது கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நோய் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பு. தங்கராசா வடகிழக்கு மாகாண கால்நடை வைத்தியப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தேவையான தடுப்பூசி மருந்துகளை வரவழைத்தார்.

கால் நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி வடமராசிப் பிரதேசத்தில் சனசமூக நிலையங்கள். மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற 24 நிலையங்களில் கடந்த 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பணி எதிர் வரும்29 ஆம் திகதி வரை நடைபெறும்.

(ஐ-173)

### நாளை

வைகாசி - 25

திங்கட்கிழமை

திதி: திரயோதசி

முற்பகல் 8.14 வரை

நட்சத்திரம்: விசாகம்

பிற்பகல் 04.14வரை.

வைகாசி விசாகம்

சுபநேரம் 11.52 –01.22

ராகுகாலம்: 07.22 – 08.52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கோபம் என்பது ஒரு தற்காலிகமான பைத்தியம் ஆகும்.

ஹோரேஸ்

## எதிரொலி!

- தமிழ் நாட்டிலே தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்பதில் அ. தி. மு. க. இப்போதும் உறுதியாயிருக்கின்றது.
  - ★ கலைஞர் ஆட்சி கலைக்கப்படும் வரை ஜெயலலிதா "கலை"யாடிக் கொண்டே இருப்பார்!
- இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் சமீபத்தில் பரிஸில் நடைபெற்றது.
  - ★ தமிழினத்தைப் பொறுத்தவரை, அது "உதையும்" நாடுகளின் கூட்டம்!
- பாகிஸ்தானின் அணு குண்டு வெடிப்புச் சோதனையை அமெரிக்காவும் சீனாவும் கண்டித்துள்ளன.
  - ★ உதட்டளவில் ஆத்திரம், உள்ளூர ஆனந்தம்!
- இராணுவம் போன்று உடையணிந்து வீடுகளிலே. திருட்டு.
  - ★ முதலில், அந்த இராணுவ உடைகளைத் 'திருடியவர்' யார் என்று கேட்கின்றார் நாலுந் தெரிந்த ஒருவர்.
- இராணுவத்திலிருந்து தப்பியோடிக் கைது செய்யப்படுவோர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
  - ★ யாழ்ப்பாணத்தில் இருப்பதே ஒரு தண்டனை தான் எனப் படைத் தலைமை கருதுகின்றதோ?
- கள்ளுத் தவறணையிற்கை கலப்பும் கத்திக்குத்தும்.
  - ★ தவறுகளை அணைக்கும் இடத்தில் வேறென்ன நடக்கும்?
- 'வெற்றி உறுதி''ப் போரை முடிவிற்குக் கொண்டு வந்து நாட்டிலே சமாதானத்தை நிலை நாட்டுவோம்.
  - ★ இல்லாத கறுப்புப் பூனை ஒன்றை இருட்டறைக் குள்ளே தேடிக் கண்டு பிடிப்பேன் என்றானாம் குருடன் ஒருவன்!
- சீருடை தரித்த ஆயுதக் குழுவினர் கதிர்காமப் பகுதியில் அட்டகாசம்.
  - ★ சீரை உடைப்பவர்கள் தான் சீருடை அணிகின்றார்களோ?

— இடியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை
# அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர்
# மஹா கும்பாபிஷேக

## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

ஈச்சமோட்டையில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ ஞான வைரவ சுவாமிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மன மகிழ்ச்சியைத் தருவதாகும்.

மனிதனை ஞானவழியில் செல்லாமல் தடுத்து நிற்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையும் திரிசூலத்தைத் தாங்கி நின்று அகற்றி அருளுள்ள மனிதனாக மாற்றுவதே வைரவப் பெருமானின் திருவருளாகும்.

ஈச்சமோட்டை வாழ் சைவ மக்கள் செய்த புண்ணியத்தின் பயனாக இவ்வாலயம் அருட்பணிகளையும், அறப் பணிகளையும் ஆற்றுவது ஏனைய ஆலயங்களுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. சைவ நற்சிந்தனை, சமய பாட வகுப்புக்கள் போன்றவற்றை நடத்தி ஆலய பரிபாலனசபையினர் ஆலயத்தை நல்ல முறையில் வழி நடத்தி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

இக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சைவ சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், ஆலய பரிபாலன சபையினருக்கும், அறங்காவலர் சபையினருக்கும், ஊர் மக்களுக்கும் காத்தற் கடவுளாம் வைரவப் பெருமானினுடைய அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
(இரண்டாவது குருமஹா சந்நிதானம்)

## மக்கள் ஆறுதல் பெறட்டும்

ஆனந்த வாழ்வும், ஆத்ம திருப்தியும் ஆன்மீக வாழ்வொன்றினால் மட்டுமே பெறமுடியும்.

அந்நியராட்சியில் அருமருந்தான ஆலயங்கள் அழிக்கப்பட்ட வேளை சைவசமயத்தின் மீளா அடியவர்கள் வைரவர் வழிபாட்டை வளப்படுத்தி சைவம் காத்தனர். அந் நிலையில் சுண்டுக்குளி ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயமும் சைவம் காப்பதற்கு முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது.

அருட்பொலிவும் அழகும் நிறைந்த இத் திரு ஆலயம் மிகப் பெரிய வளர்ச்சிபெற்று ஈழநாட்டு வைரவர் ஆலயங்களில் முதன்மை மிக்க ஆலயமாகத் திகழ்கிறது. பூசை, ஆராதனை, கூட்டுவழிபாடு, உற்சவம் என எவ்வேளையும் ஆலயத்தில் அருள் நிகழ்வுகள் நடந்த வண்ணமே இருக்கும்.

வருடத்தில் ஒரு நாள் வடம் பிடித்து அடியவர்கள் வைரவப் பெருமானை திருமஞ்சத்தில் வீதியுலாக் கொண்டு வருவார்கள். அந்தஅற்புதக்காட்சி காண பட்டணத்து மக்கள் பலரும் கூடுவர்.

இப்புனித தலம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடை பெறுவது அறிந்து பெருமகிழ்வெய்துகிறேன். ஆலயத்திருப் பணிக்கு அயராது உழைத்த அறப்பணியாளரை வாழ்த்துகிறேன். வைரவப் பெருமானின் கும்பாபிஷேகத்தோடு எம் நாட்டு மக்கள் ஆறுதல்பெற பிரார்த்திக்கிறேன்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்
(ஆசிரியர்)

## மக்கள் சுபீட்சத்துடன் வாழ்க

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் மிகவும் புராதனமானது, இது ஈச்சமோட்டை வாழ் மக்களின் பெரும் அபிப்பிராயத்திற்குரிய ஆலயம் ஆகும். மக்கள் யாவரும் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய பின்னர் யாழ்ப்பாணத்திலே இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறும் இந்நன்னாளிலே மக்கள் எல்லோரும் சுபீட்சமுடன் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான வைரவர் அருள்பாலிப்பார் என்பது உண்மையாகும்.

இந்த ஆயலத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் தலைமையில் இக்கும்பாபிஷேகம் நடைபெறுவதும் மிகவும் சிறப்பிற்குரியதாகும்.

இக்கும்பாபிஷேக கிரியைகள் மிகவும் சிறப்புடன் நடைபெற்று இப்பகுதி வாழ் மக்கள் சிறப்புடனும், சுபீட்சத்துடனும் வாழ எம்பெருமான் அருள்புரிவார் என்று கூறி வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

## பிரதம குரு அருளாசி

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வாழ காவல் தெய்வமாக விளங்கும் சாமுண்டி அம்பிகா சமேத ஞானவைரவப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று (7-6-98) கும்பாபிஷேகம் நிகழ்கிறது.

பல இலட்சக்கணக்கான ரூபா பணச் செலவில் புதுப்பொலிவுடன் விளங்கும் ஆலயத்திற்கு இரவுபகல் பாராது உடல் உள்ளம் பொருள் என்பவற்றை வைரவருக்கே அர்ப்பணித்து —

இன்று கும்பாபிஷேகம் காண ஆசைப்பட்டு நிற்கும் பல இலட்சக்கணக்கான அடியார்களுக்கு —

சாமுண்டி அம்பிகா சமேத ஞான வைரவப் பெருமான் அருளினால் சகல ஐஸ்வரியங்களும் பெருவாழ்வும் பெற்று வைரப் பெருமானின் பூரண கடாட்சத்துடன் வாழ ஆசி வழங்குகின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

பிரம்ம ஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக் குருக்கள்
(கிரியா கலாபமணி) ஆலயப் பிரதமகுரு
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

## பெருவிழாவால் புண்ணியம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் அண்மைக் காலங்களில் திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேக வைபவங்கள் பக்திபூர்வமாகச் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இவ்வகையில் யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேன்.

கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியமெனச் சொல்வார்கள். யாகதரிசனம் செய்தலும், ஓமப்புகை சுவாசித்தலும், மந்திர ஒலியைக் கேட்டலும், உடல் நலத்தையும், புண்ணியத்தையும் தருவனவாகும். கும்பாபிஷேகத்தின் போது ஓதப்படும் மந்திர ஒலி காற்றுடன் கலந்து எங்கும் இன்பம், சாந்தி, சமதானம், சுபீட்சம் பெருக எல்லாம் வல்ல வைரவப் பெருமான் கருணை புரிவாராக!

பா. செந்தில்நந்தனன்
பிரதேச செயலர். யாழ்ப்பாணம்.

## சாந்தி நிலைப்பதாக!

ஆன்மீக வளங் கொழிக்கும் எமது அழகிய கிராமத்தில், அருளுக்கு அருள் சேர்ப்பது போல் ஒரு புண்ணிய காரியம் நடைபெறுகிறது. எங்கள் ஈச்சமோட்டை கலட்டிப் புலத்தில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் சாமுண்டி அம்பிகா சமேத ஞான வைரவப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் இன்று "குட நன்னீராட்டு விழா".

மங்களகரமான வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 24 ஆம் நாள் (7. 6. 98) ஞாயிற்றுக்கிழமை, சுவாதி நட்சத்திரமும், துவாத சித்தித் திதியும், சித்தயோகமும், சுக்கிர ஓரையும் கூடிய 6 மணி 35 நிமிடம் முதல் 8 மணி 30 வரை நிகழும் மிதுன லக்கின சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளமை நாம் செய்த பிராப்த தவப்பயனே.

சொரூபத் திருமேனியாகிய இறைவனைத் தடத்தத் திருமேனியாக வேண்டுவதே இத் திருமுயற்சியாகும். இறைவன் ஏகனாய் இருந்த போதிலும் அநாதி மல பெற்றதாகிய ஆன்மா வழிபட்டுய்ய அட்ட மூர்த்தியாய் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்மா என்ற அட்ட வடிவங்களையும் குறிப்பதாகிய யாகசாலையில் எட்டுக் குண்டங்கள் அமைத்து அருள் நிலைத்திட, கர்ம வினைகள் ஒழிந்திட, சாந்தி பிறந்திட நம்மவர்கள் எடுத்த இப் புனித முயற்சி அளவிடற்கரியது.

மங்களகரமான இந்தக் கைங்கரியத்திற்கு வழி சமைத்தவர்கள் மேன் மக்களே. 1979 இல் திருமணபந்தமாக இக் கிராமத்தில் நுழைந்தபோது, சிறுகுடிசையில் வாழ்ந்த வைரவப் பெருமான் இன்று ஆல விருட்சம்போல் அழகு மிளிரும் ஆலயத்தில் அமர்ந்திருந்து அருள் பாலிப்பதற்கு இக் கிராம மக்களின் புண்ணிய சிந்தையே காரணம். வாக்கால், கருத்தால், பொருள் வளத்தால் பல வர்ணங்களாக இருப்பினும், வைரவப் பெருமானுக்குத் தொண்டு என்றால், அவன் மார்பில் பூச்சரமாய் இணைந்திடுவர் எங்கள் ஞான வைரவப் பெருமானின் திருவருளிது.

இம் மங்களகரமான புண்ணிய தினத்தில் திரு உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் சாமுண்டி அம்பிகா சமேத ஞான வைரவப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும் மஹா கும்பாபிஷேக விழாக் காண்போம். எங்கும் சாந்தியும், அருளும் நிலைத்து அவன் தாள் தொழுவோம். எல்லா மக்களும் இன்புற்று வாழ அருள் புரிவாய் எம்பிரானே.

வே. யுகபாலசிங்கம் எம். ஏ.
ஆசிரியர்.



ஆமேவப் பூண்டருளாதி வயிரவன்
அமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொ
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கைமே

## நிர்வாகத்தினரின் கருத்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியை நன்குணர்ந்த நம் முன்னோர் எமது ஊரில் சிறிய காணி ஒன்றும் கொட்டகையாக ஆலயத்தை ஆரம்பித்தனர். இறைவன் திருவருளாலும் மக்களின் ஒற்றுமையாலும் ஆலயம் படிப்படியாக வளர்ச்சிகண்டு வந்தது. 1983 ஆம் ஆண்டு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. சில புதிய பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் புதுப்பொலிவு பெற்றது.

எனினும் அந்தத் திருப்பணிகளை நிறைவேற்றிய ஆலயபரிபாலன சபையினரால்முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. "நாம் செய்த திருப்பணிகள் சிறியவை. செய்யப்பட வேண்டியவை பெரியவை" என்ற அவர்களின் கூற்றும் பொய்க்கவில்லை. பல திருப்பணிகள் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

புதிதாக நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. ஆலய யாப்பு விதிகள் திருத்தி அமைக்கப்பட்டன. பலவகை கஷ்டங்கள் மலிந்திருந்த 1992 ஆம் ஆண்டு ஓர் அழகிய மஞ்சம் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் நாலாபுறமும் சூழ இருந்த காணிகள் சிறுகச் சிறுக வாங்கப்பட்டுகாணியின் மொத்தப் பரப்பளவு 10 பரப்பை எட்டியது.

1995 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து மகா கும்பாபிசேகம் செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் யுத்த அனர்த்தங்களால் மக்கள் இடப்பெயர்ச்சி ஏற்பட்டது. அதன்பின் மீண்டும் வந்தபோது ஆலயத்தில் சேதங்கள் ஏற்பட்டிருக்கக்

காணப்பட்
நடைபெற்ற
டத்தில் பா
நடத்தி.
செய்வதென்
கப்பட்டது.
அகற்கிண
பழுதடைந்
எறிகணை
பகுதிகளும்
டன். வசந்
டப்பட்டது
மண்டபத்தி
மன் வாசல்
டது. புதிய
ஒன்றும் ஆ
டப்பட்டது
டகை நிரந்
அமைக்கப்
தவிர சந்த
பாலமுருகன்
மூர்த்திகளு
யங்கள் அ
துடன் அர
முன்பு ச
ருக்காக அ
ருந்த பரிவ
டம் முழு
20 அடி தூ
தப்பட்டு
பரிவார ஆ
கப்பட்டது.
அனைவரை
தில் ஆழ்
பாராட்டை
இன்று ஆ
பாபிஷேகத்
றது. இவை
நிர்வாகம்
செய்து மு
பூமாலையின்
ஒத்தவர்கே
ன. அந்நா
படும் நறு
ஒத்தவர்கே
ஊர் மக்
தொகை ய
வெளிநாட்டி
கள், வர்த்த
தமது அ
பகிர்ந்து செ
யவர்கள்.

(9ஆம் ப


திருக்கேதீஸ்வரம்
திருவாசகம் சுவாமிகளின்
ஓர் அடியார்

ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்
61, பெரியகடை ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

நடராஜா ஸ்ரோர்ஸ்
64, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Y. சிவறஞ்சன்
45, K K S. வீதி,
யாழ்ப்பாணம்.

ச.
154,
ய

க. கனகசுந்தரம்
152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சிற்றி றேடர்ஸ்
64, பஜார் வீதி,
யாழ்ப்பாணம்.


சிங்கம் இண்டஸ்ரீஸ்
290, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


E. S. பேரம்பலம்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை
87, பெரிய
ய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...டை - கலட்டிப்புலம்,
# ...வர் ஆலய நவகுண்ட பக்ஷ
# ...ஷேகச் சிறப்புமலர் 07-06-1998





...ாதி வயிரவன்
...லடுந் கைக்கொண்டால்
...ழங் கையது
...வாளது கையே.

## ...ின் கருத்துக்கள்

...காணப்பட்டன. பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாலஸ்தாபனம் நடத்தி, புனருத்தாரணம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

அசுற்கிணங்க ஆலயத்தின் பழுதடைந்த பகுதிகளும் எறிகணை வீச்சுக்குள்ளான பகுதிகளும் செப்பனிடப்பட்டன. வசந்த மண்டபம் கட்டப்பட்டது. ஆலய சுற்று மண்டபத்தின் ஒருபகுதி அம்மன் வாசல்வரை கட்டப்பட்டது. புதிய மணிக்கோபுரம் ஒன்றும் ஆலய முகப்பில் சட்டப்பட்டது. மஞ்சக் கொட்டகை நிரந்தர கட்டடமாக அமைக்கப்பட்டது. இவை தவிர சந்தான கோபாலர், பாலமுருகன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு பரிவார ஆலயங்கள் அமைக்கப்பட்டதுடன் அரசமரத்தின் கீழ் முன்பு சந்தான கோபாலருக்காக அமைக்கப்பட்டிருந்த பரிவார ஆலயக் கட்டடம் முழுமையாகவே சுமார் 20 அடி தூரம் வரை நகர்த்தப்பட்டு விநாயகருக்கான பரிவார ஆலயமாக அமைக்கப்பட்டது. இவ்விடயம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுடன் பாராட்டையும் பெற்றது.

இன்று ஆலயம் மகா கும்பாபிஷேகத்தைக் காண்கின்றது. இவை அனைத்தையும் நிர்வாகம் தனித்து நின்று செய்து முடிக்கவில்லை ஒரு பூமாலையின் வாழைநாரை ஒத்தவர்களே நிர்வாகத்தினர். அந்நாரில் சேர்க்கப்படும் நறுமண மலர்களை ஒத்தவர்களே வாரி வழங்கும் ஊர் மக்கள். மற்றும் தொகையாக அனுப்பும் வெளிநாட்டில் வாழ்பவர்கள், வர்த்தகப் பெருமக்கள், தமது அனுபங்களைப் பகிர்ந்து கொள்ளும் பெரியயவர்கள். இவ்வளவு திருப்

(9ஆம் பக்கம் பார்க்க)

## வைரவப் பெருமானை வணங்குவோம்

''பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒரு தலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்''

யாழ். மக்கள் பக்தி சிரத்தையோடு வழிபடும் குலதெய்வமாக விளங்குபவர் வைரவப்பெருமான். எதற்கெடுத்தாலும் வைரவா வைரவா என்று ஓலமிட்டு அழைத்து உருகித் துதிப்பவர்கள் யாழ்ப்பாணச் சைவமக்கள். கொட்டிலிலும், தொட்டிலிலும், சந்தியிலும் சாவடியிலும், ஒரு சிறிய சூலத்தையாவது வைத்து வழிபட்டு நேர்த்திக்காகப் பொங்கலிட்டுப் பூசித்துப் போற்றுபவர்கள் எமது சைவமக்கள்.

இன்னும் ஒருபடி மேலாக வைரவப் பெருமானுக்கு சிவாகம முறைப்படி கோயில்கட்டி குடமுழுக்காட்டி உற்சவங்கள் நடத்தி பேரானந்தம் அடைகின்ற நிலையையும் நாம் காண முடிகிறது. இத்தகைய நிலையில் சிறந்த ஒரு திருக்கோயிலாக ஈச்சமோட்டை வைரவப்பெருமான் திருக்கோயில் பல்லாண்டு காலமாக எழுச்சியும் அருள் வளர்ச்சியும் பெற்று விளங்குகின்றது. இவ்வாலய உற்சவகாலங்களில் நான் அங்கு சென்று உரையாற்றியமையை இன்றும் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறேன். அமைதியும் பக்தியும் மெய்யடியார்களின் திருத்தொண்டும் சிறந்து விளங்கும் ஓர் ஆலயம் இதுவாகும். பெருமானின் அருட்கருணையினால் இவ்வூர் மக்களும் பேரோடும் புகழோடும் சைவப்பண்பாட்டோடும் வாழ்ந்து வருகின்றனர்.

வைரவர் பூரண இன்ப வடிவானவர். அவர் ஆடும் ஆட்டமெல்லாம் சிவனது ஆடல்களே என்பது உண்மைக்கருத்தாகும். இவரை வழிபடுவதால் கடன்தொல்லை, பகை. சிறைச்சாலைத் துன்பம், பிணி, நீதிமன்றத்தொல்லை, களவு முதலிய செயல்கள் நீங்கி சுமுகமான வாழ்வு வாழ வழிபிறக்கும் என்பது அருளாளரும் அனுபவம் பெற்றோரும் எடுத்துக்கூறும் உறுதி மொழிகளாகும்.

''வயிரவப் பெருமான் திருவடிகள் வாழ்க''

*சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*

## அவன் தாள் வணங்குவோம்

நாற்பத்தைந்து ஆண்டுகாலப் பாரம்பரியமுடைய யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை - கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர்ஆலய கும்பாபிஷேக விழா நடைபெறும் செய்தியறிந்து அளவிலா மகிழ்ச்சியடைகிறேன்.

பரமனைமதித்திடாப் பங்கய ஆசனனின்ஒரு தலைகிள்ளி ஒழித்தவனான வைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேக விழா எடுக்கும் ஆலய பரிபாலன சபையாரின் முயற்சியைச் சைவ நல்லுலகம் என்றுமே மறக்க மாட்டாது.

சரித்திரப் பெருமைமிக்க அருள் மிகு ஆலயங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாண நன்னகரிலே, ஈச்சமோட்டை- கலட்டிப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் அருள் அனைவர்க்கும் கிட்ட வேண்டி அவன் தாளை வழுத்துகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்

மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## தேவ அருள் கிடைக்கும்

சைவசமயிகளால் ஒரு முக்கியமான காவல் தெய்வமாக வணங்கப்படுபவர் வைரவக் கடவுள். எமது பிரதேசத்தில் வைரவ ஆலயங்கள் சிறிதாகவும், பெரிதாகவும் கணிசமாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

அண்மைக்கால போராட்ட நிகழ்வுகள், இடப்பெயர்வு நிகழ்வுகள் காரணமாக பல ஆலயங்கள் சேதமடைந்தும், அழிவுற்றும் உள்ளன. அவற்றைப் புதுப்பித்து புனரமைப்புச் செய்வதில் சைவப் பெருமக்கள் ஆங்காங்கே ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான முயற்சியில் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் மிகுந்த செலவில் அதன் ஆலய பரிபாலன சபையின் முயற்சியால் புனரமைக்கப்பட்டு 7 - 6 - 98 ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளமை அவ்வூர் மக்களுக்கு பெருமை தரக்கூடியதும், தேவ அருள் கிடைக்கக் கூடியதுமான நிகழ்வாகும்.

*சி. வி. கந்தையா சிவஞானம் (ச. நீ.)*
தலைவர், யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வரையாது வரம் வழங்கும் வைரவர்

யாழ்ப்பாணத்தில் சுண்டுக்குளிக்கு அண்மையில் கலட்டிப் புலம் என்னும் புனித தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளும் ஞான வைரவப் பெருமான் அப்பகுதி மக்களின் குல தெய்வமாக விளங்குபவர். அன்பர்களின் இன்னல் களைந்து நல்லருள் பாலிக்கும் ஞானவைரவப் பெருமானது ஆலயத்தில் அன்பர்கள் அடியார்கள் ஆகியோரது நன் முயற்சியினால் திருப்பணிகள் நிறைவேறி, எம்பெருமானது கும்பாபிஷேக வைபவத்தைக் காணும் பேறு பெற்றுள்ளமை அவன் திருவருள் அன்றி வேறில்லை.

யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்கள் பிற நாட்டாரது ஆட்சிக் காலத்தில், தத்தம் இல்லங்களில் வைரவப் பெருமானுக்குரிய வழிபாடுகளை மேற்கொண்டு வந்தமை வரலாறு கண்ட உண்மை. அம்மரபினை அடியொற்றி எழுச்சி பெற்றது இந்த ஞானவைரவர் ஆலயம் எனில் மிகையில்லை.

ஆலயங்களில் நித்திய நைமித்திக பூசைகளின் போது வைரவப் பெருமானுக்கும் பூசைகள் இன்றியமையாது இடம் பெறுவன. பக்தியுள்ளத்தோடு எவரும் வைரவப் பெருமானை வழிபடும் வாய்ப்புண்டு. அன்பர்கள் வேண்டி நிற்கும் வரங்களை வரையாது வழங்கும் வைரவப் பெருமானின் தெய்வீகப் பெருமைகளைக் கந்த புராணம் சிறப்பாசப் போற்றுகின்றது.

கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி பக்தியுடன் நிகழும் இவ்வேளை இவ்வரிய கைங்கரியத்தில் ஈடுபட்ட அடியார்களுக்கும் அறங்காவற் சபையினருக்கும் எம்பெருமான் ஞான வைரவரின் திருவருள் பொலிவதாகுக! கும்பாபிஷேக திருவருட் பேறு ஞாலம் முழுவதும் சிறப்புற்றோங்குக! எல்லோரும் இனிதே வளமுடன் வாழ ஞானவைரவரின் திருவருள் என்றென்றும் துணை நிற்பதாகுக!

*பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்*
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## காவல் தெய்வம் வைரவர்

சிவபெருமானின் அருள் வடிவங்களில் ஒன்றே வைரவர் வடிவமாகும் சிவனின் இருபத்தைந்து வடிவங்களில் துஷ்ட நிக்ரஹ வடிவமாக அமைந்திருப்பது வைரவர் மூர்த்தமாகும். சிவனே வைரவர் ஆகி பிரம்மா முதலிய தேவர்களின் அகந்தையை அடக்கியதாக புராணங்கள் கூறுகின்றன. வைரவப் பெருமானுக்கு ஷேத்திர பாலர் என்றொரு பெயர் உண்டு. ஷேத்திர பாலர் என்பதற்கு கோயிலைக் காப்பவர் என்பது பொருளாகும். ஆலயங்களின் காவல் தெய்வமாக மாத்திரமல்லாது கிராமங்களின் காவல் தெய்வமாகவும் வைரவப் பெருமானின் வணக்கம் இருந்து வருகிறது.

மத சுதந்திரம் மறுக்கப்பட்டு வாழ்ந்து வந்த யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கேயருடைய ஆட்சிக் காலத்தில் சிவனிலிருந்து வேறாகாத வைரவர் சூலத்தை கிணற்றடியிலும், மரங்களினடியிலும், வீட்டு வளவுத் தோட்டங்களிலும் நாட்டி வைத்து வணங்கினர், வைரவப் பெருமானின் வணக்கமே சைவசமயத்தையும், சைவத்தையும் அந்நியரிடமிருந்து காப்பாற்றியது.

யாழ்ப்பாணத்தில் சைவ கலாசாரத்தைப் பாதுகாக்கவும் எமது சமயப் பாரம்பரியம் மீண்டும் புத்துயிர் பெறவும் நாம் இன்று சைவர்களாகவே வாழவும் வழிவகுத்த வைரவப் பெருமானின் அருட்கடாட்சத்தைப் நாம் என்றுமே மறக்க முடியாது.

சிறு கோயில்களாக ஆரம்பிக்கப்பட்ட வைரவர் ஆலயங்கள் இன்று ஆகமவிதிக்கு அமைய அமைக்கப்பட்ட பெரும் கோயில்களாக மாற்றம் பெற்று வருகிறது. பெருஞ்சாந்தி வைபவமாகிய மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக நடத்தப்படுகிறது.

ஈச்சமோட்டையில் இருந்து அருள் புரியும் ஞானவைரவப் பெருமானின் மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெறுவதோடு வைரவப் பெருமானின் அருட்கடாட்சம் அனைவருக்கும் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக!

*சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்*
(விரிவுரையாளர் பலாலி, ஆசிரியர் கலாசாலை)

## தற்போதைய நிர்வாகசபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர்- | திரு.சி. சிவறாஜேஸ்வரன் |
| உப தலைவர்- | திரு. மு. பத்மநாதன் |
| செயலாளர்- | திரு. ச. தவசீலன் |
| உப செயலாளர்- | திரு.கு. மாயாசுதன் |
| பொருளாளர்- | திரு. து. தனபாலசிங்கம் |
| நிர்வாக சபையினர் | திரு. க. யோகரெத்தினம், |
| | திரு. இ. நடராசா, |
| | திரு. க. சுந்தரலிங்கம் |
| | திரு. த சங்கரலிங்கம் |


ச. வி. முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

K. K. கந்தையாபிள்ளை
318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அலன் பன்சி கவுஸ்
7, பஜார் வீதி,
யாழ்ப்பாணம்.

வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிருஷ்ணா
தொலைத் தொடர்பகம்
87, பெரியகடைஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

வேணி
தொலைத் தொடர்பகம்
165, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

பகவான் உலகத் தொலை
தொடர்பு சேவை
342, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புறொமோட்டர்ஸ்
எஞ்சினியரிங் லிமி.
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்

**திரு ஜே. எக்ஸ். செல்வநாயகம்**

அவர்களின் அன்புத்தந்தையார்

## சவிரிமுத்து ஜோசப்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும், குடும்பத்தினருக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலர்,
செயலக உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள்,
சிற்றூழியர்கள்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை.

(56647)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 05 — 1926

உதிர்வு: 08 — 05 — 1998

**அமரர் சின்னத்தம்பி நடராசா**

அன்புத் தெய்வமே! பாசத்தோடு அன்புகாட்டி எமை வளர்த்தீரே! உமது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் துயரச் செய்தியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(56589)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி**
**வேலாயுதபிள்ளை வள்ளியம்மை**

தோற்றம் 16 — 05 — 1918

மறைவு 08 — 05 — 1998

அன்பின் எங்கள் இதயத் தெய்வமே!
பாசமிக்க எங்கள் அன்புச் செல்வமே!
உங்கள் அன்புமுகத்தை எந்த ஜென்மத்தில்
காண்போம்?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேலணை கிழக்கு,
3 ஆம் வட்டாரம்.

(56632)

# இன்று

சாவகச்சேரி நகரசபையினால் ஆறு லட்சம் ரூபாசெலவில் நுணாவில் 190 ஆம் கட்டையடியில் அமைக்கப்பட்ட பொது நூல் நிலையக்கிளைக் கட்டடத்திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நகர சபை செயலாளர் மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா, சாவகச்சேரி நகரசபை முன்னாள்செயலாளர் த.நவரத்தினராசா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா ஆகியோரும் கலந்து கொள்வர்.

* * *

உதை பந்தாட்ட விதிகள் தொடர்பான விரிவுரை வகுப்புகள் யாழ். ஈச்சமோட்டை வீதியில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளன.

முதலாவது வகுப்பு இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் நோக்குடன் நடைபெறும் இவ் வகுப்புக்களில் ஆர்வமுள்ளவர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

* * *

ஆனைக்கோட்டையில் உள்ள முள்ளி தச்சுத்தொழிலாளர்கூட்டுறவுச் சங்கத்தின ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவும், தொழிற்சாலைத் திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தலைவர் க. சந்திரன்தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

யாழ். மேலதி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் விழாவில் கலந்து கொண்டு தொழிற்சாலையைத் திறந்து வைப்பார்.

(ஐ-17)

# இலத்திரனியல் ஆய்வுப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விஞ்ஞான மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அறிமுக இலத்திரனியல் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 3 ஆம், 14 ஆம் திகதிகளில் காலை 6 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரண தர விஞ்ஞான மாணவர்கள் ஜி. சீ. ஈ. உயர்தர விஞ்ஞான மாணவர்கள் மற்றும விஞ்ஞான பாட ஆசிரியர்களின் திறன் விருத்தியை நோக்கமாகக் கொண்டு விரிவானமுறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆய்வுப் பட்டறைக்கு ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்தோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆய்வுப் பட்டறையில் கலந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் பெயர் விவரங்களை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் அதிபருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ)

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

♠ ♠ ♠ ♠ ♠ ♠ ♠ ♠

செல்வன்

## நல்லசிங்கம் பிருந்தன்

நல்லசிங்கம் பாமா தம்பதிகளின்
செல்வப் புதல்வன் பிருந்தன்

தனது 3 ஆவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் 07-06-1998 ஞாயிற்றுக்கிழமை இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், சித்தப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், நவனிதா, சுவிஸ் மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், சுகன் அண்ணா, அக்காமார், ஜெனனி, சுகன்யா, சுவர்ணா, மச்சிமார், லேயா, யூலி, ராதிகா சித்தி, சுரன் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள், மாயக்கண்ணன் திருவருள் கொண்டு பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

வ. நல்லசிங்கம்
பிருந்தன் களஞ்சியம்

நாராயணன் R. D. S. லேன்,
கோண்டாவில் கிழக்கு.

(56665)

# சம்பந்தன் வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

(கண்ணுத்துரை கிளினிக்)

மேற்படி நிலையத்தில் மீண்டும் முன்பு போல் இரத்தம், சலம் போன்ற சகல பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சம்பந்தன் வைத்திய நிபுணர்
ஆலோசனை நிலையம்.
(இலங்கை வங்கி அருகில்)
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(56643)

காரை ஈழத்து சிதம்பரத்தின்

# குடமுழுக்கால் குவலயம் சிறந்திடும்

ஈழத்து சிதம்பரத்தின் குடமுழுக்கால்
இந்நாட்டு இன்னல்கள் தீரட்டும்
காலத்தின் கோலங்கள் மாறட்டும்
காரையின் மாண்புகள் உயரட்டும்
சீலங்கள் மண்ணிலே பெருகட்டும்
சீர்மிகு வாழ்வு மலரட்டும்
ஆலயம் சிறந்து விளங்கட்டும்
ஆண்டிகேணி ஐயன் நாமம் துலங்கட்டும்

- மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்

குடமுழுக்கு விழா சிறந்திட
வாழ்த்துவோர்

தரமான பட்டுப் புடைவைகளின் கைராசியான ஸ்தாபனம்

**சீமாட்டி**
**புடைவைக் கடல்**

இல. 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3944)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முதலாம் ஆண்டு மாணவன்

செல்வன்

## சிவானந்தன் சுரேஸ்

அவர்களின் பிரிவுத்துயரால் சோகக் கடலினுள் மூழ்கி இருக்கும் பெற்றோர், சகோதரர் யாவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/ புங்குடுதீவு கமலாம்பிகை
வித்தியாலயம்.

(56649)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவனான
சிவானந்தராஜாவின் அன்புத் தந்தையார்


**சி. நமசிவாயம் (J. P.)**

அவர்களின் அகால மரணத்தையொட்டி துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

97 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு மாணவர்கள்
யா / கனகரத்தினம் ம.ம.வி.

(56670)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 22 — 09 — 1933

உதிர்வு 08 — 05 — 1998

அமரர்

**குமாரவேலு அழகரத்தினம்**

(முன்னாள் தலைவர், ஞானசம்பந்தர் கலைமன்றம்)

குழந்தை உள்ளமும், குமிழ்சிரிப்பும், பணிவான பார்வையும், அன்பான சேவையும், 'தங்களிடமே கண்டோம். எங்கள் மன்றத்தை வழிநடத்திய பெருந்தகையே! தங்கள்ஆத்மா சாந்தியடைய முதல்வி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்.

ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலிகிழக்கு,
பருத்தித்துறை.

(56490)

## வலி. வடக்கில் 5 வீதிகள் திருத்தம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் ஐந்து வீதிகள் திருத்தம் செய்யப்படவுள்ளன.

[illegible] மகாத்மா வீதி, மல்லாகம் பங்களா வீதி, ஆவளை பத்தாவத்தை வீதி, கூத்தன்சீமா வீதி, பன்னாலை வறுத்தளைப் பிள்ளையார் வீதி ஆகியனவே திருத்தம் செய்யப்படவுள்ள வீதிகளாகும்.

இவற்றின் திருத்தத்துக்கென 10 இலட்சத்து 8 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை வடக்கு மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-27]

## மண்வெட்டிப் பிடிகள் பெறுவது சிரமம்

யாழ். மாவட்டத்தில் பெருமளவு மண்வெட்டி அலகுகள் விநியோகிக்கப்பட்டிருப்பினும், மண்வெட்டிக்கான பிடிகள் இல்லாமல் அவற்றைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

முன்னர் வன்னிப் பகுதியிலிருந்து எடுத்து வரப்படும் முதிரைப் பிடிகள் பயன்படுத்தப்பட்டதாகவும் —

வன்னிப் பிரதேசத்துடனான தொடர்புகள் தடைப்பட்ட பின்னர் பிடிகள் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது பற்றி விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளால் விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. திருகோணமலையில் இருந்து அவற்றைப் பெற்றுத்தர ஆவன செய்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-27)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனான
சிவானந்தராஜா (சிவா)
அவர்களின் தந்தையாரான

**சி. நமசிவாயம் (J.P.)**

அவர்களின் அகால மரணத்தினால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(56669) — நண்பர்கள்.

நெல்லியடி

## தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய தேர்த் திருவிழா

08 - 06 - 98 திங்கட்கிழமை

காலை 9-00 மணிக்கு: தேரோற்சவம்
அவ்வேளையில்

T. உதயசங்கர் - கேதீஸ்வரன் குழுவினரின் நாதஸ்வர கான மழை இடம் பெறும்.

காலை 11-30 மணிக்கு:
பிராயச்சித்த குளிர்ச்சி அபிஷேகம்

அவ் வேளையில் ஆலய வெளி மண்டபத்தில்
''சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே''
''கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்''
புகழ் இயல் இசை வாரிதி

பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்
அவர்கள்

இயற்றிய நெல்லை முருகன் பக்திப் பாமாலையுடன் திருப்புகழும் சேர்ந்த தெய்வீகத் தேனிசை பக்க வாத்தியங்கள் சகிதம் இடம் பெறும்.

பாடுபவர்: நயினை திரு. நா.வி மு. நவரத்தினம்
அவர்கள்

(முதுமெய்யியல் தத்துவமாணி – இசை: சிரேஷ்ட விரிவுரையாளர் – இசைத்துறை இராமநாதன் நுண்கலைக் கழகம், யாழ். பல்கலைக்கழகம்)

பி. ப. 1-00 மணிக்கு:- சண்முகார்ச்சனை

அனைவரும் வருக; அருளமுதம் பெறுக!

உபயகாரரும்,
ஆலய பரிபாலன சபையினரும்.

(சி-3946)

ஸ்ரீராம ஜெயம்

வண்ணை

# ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்



குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை கண்டு உடலென நெக்குருகு
மாலோ என்செய்கேன் உலகத்தீரே.

## ஸ்ரீரெங்கநாத சுவாமி கோபுர நிர்மாண அடிக்கல் நாட்டு வைபவம்

எம்பெருமான் அடியார்களே!

அடியவர்களின் குறை தீர்த்தற் பொருட்டு திருப்பாற்கடலில் திருமகளுடன் அரவணையில் பள்ளி கொள்ளும் பரந்தாமன். ஸ்ரீரெங்கவாசன் தன் சந்நிதி முன் ஓர் அழகிய திருக்கோபுரம் அமைய பெறத் திருவுளம் கொண்டுள்ளான்.

இதன் நிமித்தம் நிகழும் (வெகுதானிய வருடம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் (10-06-98) புதன்கிழமையும் பூரணையும் மூல நஷத்திரமும் மிதுன லக்கினமும் சித்தயோகமும் அமையப் பெற்று பழைய நேரப்படி காலை 7-30 மணி முதல் காலை 8-15 மணி வரை உள்ள சுப வேளையில்) மேற்படி ஸ்ரீரெங்கநாத சுவாமி கோபுர நிர்மாணத்துக்கு அஸ்திவார ஸ்தாபிதம் செய்ய பெருமாள் திருவுளம் செய்துள்ளார். ஆகையால் அரங்கனது அடியார்கள் ஆகிய நாம் மேற்குறிப்பிட்ட சுபவேளையில் இவனது கோபுர நிர்மாணத்துக்கு அங்குரார்ப்பணப் பணியை இனிதே தொடக்கி வைத்து இக்கோபுரம் நிறைவுறப் பல்வகையிலும் உதவுவோமாக.

சுபமஸ்து!

காலம்: 10 – 06 – 1998 புதன்கிழமை
காலை 7-30- க்கும் காலை 8-15-க்கும் இடைப்பட்ட சுபவேளை (பழைய நேரப்படி)
கண்ணன் அடியார்கள் அனைவரையும் எம்பெருமான் அருள்பெற அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
ஸ்ரீ ரெங்கநாத கோபுர திருப்பணிச் சபை,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஆதீன மகாசபை.

(சி/3939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டீசல எஞ்ஜின்கள் லண்டன் லிஸ்ரர் 12 H.P, 28 H.P J.K 31 H.P ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு; K. குமரன், (கலைவாணி) பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி.
[56562]

### ஆட்டுக்கடா விற்பனைக்கு

எமது சங்கத்தில் ஆட்டுக்கடா இரண்டு விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 10 - 06 - 98 ஆம் திகதிக்கு முன் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். (சி/3930)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) ஊர்க் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 141, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.
(56579)

இறைச்சிக்கோழி புறோயிலர் விலை 170/-. கல்பேட்ஸ் 120/- விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்து கொடுக்கப்படும்) தொடர்பு; இல. 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.
[56668]

### வகுப்புகள்

ஆங்கிலமொழிப் பேச்சு. கவிதைகள், கிற்றார்பாட்டு வகுப்பு திறமையாகக் கற்பிக்கப்படும். தற்போதும் வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு கொள்ளவும்: திருமதி கதிர்காமர், இல. 31, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளி
[56627]

### எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில எரு விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 10-06-98 ஆம் திகதிக்கு முன் எருவைப் பார்வையிட்டு விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
[சி/3929]

### தவறிவிட்டது

மானிப்பாய் நவாலி வடகைச் சேர்ந்த தேவா சுலோசனாவின் அடையாள அட்டை (465111232V) 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தட்டா தெருச்சந்திக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அலங்கார் புடைவையகம், நவீனசந்தை உட்புறம் யாழ்ப்பாணம், என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.
[56656]

## பனை அபிவிருத்திச் சபை
## காணி தேவை

பனை அபிவிருத்திச் சபையின் தலைமைப் பணியகக் கட்டடம் அமைப்பதற்கு உகந்த காணி தேவை. காணியின் விஸ்தீரணம் நாலு பரப்புக்குக் குறையாமலும், ஆறு பரப்புக்கு மேற்படாததுமாக இருத்தல் வேண்டும். இக்காணி யாழ். கச்சேரிக்கு ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் பிரதான பஸ் பாதையில் அல்லது பிரசித்தி பெற்ற பாரிய பாதையில் இருத்தல் வேண்டும.

காணி ஓரளவு சதுரமாக அல்லது நீள் சதுரமாக இருத்தல் வேண்டும். விலை மற்றும் ஏனைய விவரங்களை எழுத்து மூலம் 25. 06. 98 ஆம் திகதிக்கு முன்பு பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,

இல, 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07 - 06 - 1998

(சி/ 3941)

## கம்பஹாவில் மின் மாற்றி தகர்ப்பு

கொழும்பு, ஜூன் 7

கம்பஹா மாவட்டத்தில் சஹசல்வத்த என்னும் இடத்தில் கடந்த வியாழன் மின் மாற்றிஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தில் ஒரு வார காலத்தில் தகர்க்கப்பட்ட மூன்றாவது மின் மாற்றி இது ஆகும்.

(இ-10-3)

உ
சிவமயம்

## யாழ். வண்ணை நாவலடி தலையாழி
## ஞான வைரவர் மகா கும்பாபிஷேகம்

வைகாசி 24 ஆம் நாள் [07 - 06 - 98] ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 6. 30 மணி தொடக்கம் 8. 30 மணி வரையிலான சுப முகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் வந்து தரிசித்து இறை அருள் பெறுவீர்காள்.

பிரதிஷ்டா பிரதம குரு

பிரம்ம ஸ்ரீ தானு வாசுதேவக் குருக்கள்
(கானப்பிரியன்)
சர்வ சாதக குரு - பிரம்ம ஸ்ரீ ம. தானுநாதக் குருக்கள் இணுவில்
ஆலய குரு பிரம்ம ஸ்ரீ இ. நடராஜக் குருக்கள்
சுபம!

- வைரவ அடியார்

(56596)

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய

## நூற்றாண்டு ஞாபகார்த்த பரிசில் நாள்

இடம்: பிரதான மண்டபம்
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

காலம்: 08 - 06 - 98 திங்கள்
பிற்பகல் 12.30 மணி (S. L. T.)

பிரதம விருந்தினர்: சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்
ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

சுவாமி அவர்களால் ஏழை மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்படும்.

அதிபர்
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

(56631)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 — 02 — 1940
உதிர்வு 30 — 05 — 1996

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்துரை

திதி: 07 - 06 - 1998

தெரிந்திடும் உங்கள் முகம் தேடிய செல்வத்தில்
மறைந்திடும் காலங்கள் கரைகின்ற நாள்களால்
மறையாது மனங்களில் உறைந்திடும்
உங்களுக்காக!
நிறைவோடு நிமலனடி வேண்டுகிறோம்
இந்நாளில்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்-

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

இல: 17, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(56609)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
01 - 07 - 1998 — 31 - 12 - 1998 வரை

## இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை
## மீள்கேள்வி அறிவித்தல்

வலி. கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள கீழ்வரும் இறைச்சிக் கடைகளை 01—07—1998 முதல் 31—12—1998 வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான கேள்விகள் 22—06—1998 நண்பகல் 12 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு திறக்கப்படும் கேள்விப்பத்திரங்களை உரிய படிவக் கட்டணம், கேள்வி வைப்புப்பணம் என்பனவற்றைச் செலுத்தி 19—06—98 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1. அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 2,000.00 | 60,000.00 |
| 2. நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 2,000.00 | 30,000.00 |
| 3. இருபாலை மாட்டிறைச்சிச் கடை | 200.00 | 2,000.00 | 40,000.00 |
| 4. இருபாலை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 200.00 | 1,000.00 |
| 5. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 200.00 | 2,000.00 | 30,000.00 |
| 6. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 2,000.00 | 40,000.00 |
| 7. ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 2,000.00 | 30,000.00 |

செல்லையா குகதாசன்,
செயலாளர்

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
07—06—1998

(சி/ 3943)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 30 — 11 — 1971
ஆண்டவன் அடியில் 07 — 06 — 1992

## தம்பு மதிவதனா

ஏழாண்டு முடிந்ததம்மா உன் அன்புமுகம் கண்டு
தங்கையே எமதருமைத் தங்கையே!
நாமெல்லாம் எங்கேயென நினைத்து
எங்கு சென்று விட்டாய்?
சொல்லாமல் நீ செல்ல உன்னிடத்தில் வந்ததோ
பொல்லாத நோய்- ஐயோ!
அழுதழுதும் ஆறவில்லை, எம்துயரம் தீரவில்லை
எம் காலமெல்லாம் உன் நினைவால் வாடும்:

உன் அன்பு அப்பா,
உடன்பிறப்புக்கள்,
அன்புப்பிள்ளைகள், மருமக்கள்,
மைத்துனிமார், மைத்துனர்மார்,
உற்றார், உறவினர்.

கிராச்லேன்,
சண்டிலிப்பாய்,
தகவல்: க. இராசன்.

(56660)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

★ போட்டோ பிரதிகள் உடனுக்குடன் செய்து கொள்ளலாம்,

★ தொழில் பெறுநர் விண்ணப்பங்களை எம்மிடம் பெற்று விண்ணப்பிக்கவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(கந்தசாமி கோயில் டக்கு வீதி) (56645)


# அனோ கல்வி நிலையம்

இளவாலை

எமது கல்வி நிலையத்தில் கல்விபயின்று கடந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி
ஆசிரியர்கள், பெற்றோர்கள்.

(56556)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10 — 05 — 1923

மறைவு
07 — 06 — 1997

## தளையசிங்கம் திருஞானம்


(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அன்பான தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

38, கோயில் வீதி ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (56658)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
30 — 05 — 1943

அமலன் அடியில்:
13 — 06 — 1996

## திருமதி கமலரட்னாவதி சுந்தரலிங்கம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

திதி: 07-06-1998

ஈராண்டு ஆனதம்மா இன்முகம் கண்டு நாம்
தரமுயர வாழவைத்த தாயுன்னை இதயக்
கமலத்திருத்தி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி பதம்
கரங் குவித்து இறைஞ்சுகின்றோம் சாந்தி
அருளிடவே!

திருக்கோயில் யாவும் தினந் தினம் தொழுது வந்து
இருந்தனையே விரதங்கள் எத்தனையோ
அத்தனையும்
மருந்தாக வந்து உடலுறுப்பு நோய் தீராமல் - தன்
விருந்தாக அழைத்தானோ அன்னை தீராப்பிணி
தீர்த்து!

என்ன துயர் என்னபிணி எவ்வளவோவுற்றாலும்
அத்தனையும் நீ தாங்கி ஆன பணி செய்தாயம்மா!
அம்மம்மா என அழைக்கும் அன்புப் பேரனுக்கு
அம்புலி காட்டி நல் அமுதூட்டும் முன்னா
சித்தமே கலங்க வைத்து சிவகதியுற்றாயே!

கள்ளங் கபடமின்றி காலமெல்லாம் நாம் நடக்க
காவற் தெய்வமாய் காத்து நின்ற அன்னையே!
வெண்பட்டு நிலவென சாந்தி நீ பெற்றிடவே
இறைஞ்சுகின்றோம் இறைவனை எந்நாளும்!
ஓம் சாந்தி!

- குடும்பத்தினர்

1/15, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (சி/3955)

# இன்றைய கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம், ஈ. எஸ். பேரம்பலம் அன் சன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ள இன்றைய ஆட்டத்தில்

★ காலை 8.30 மணிக்கு:- கே. சி. சி. சி. விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும்,

★ பிற்பகல் 1 மணிக்கு:- ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக நீல அணியும் மோத உள்ளன. (இ-9)

# விளையாட்டு அபிவிருத்தி கருத்தரங்கு

யாழ். குடா நாட்டில் — மாவட்ட ரீதியில இயங்கும் - பல்வேறு விளையாட்டுக்களுக்குமான சங்கங்கள் மற்றும் லீக்குகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' அலுவலகத்தின் கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகர் கலாநிதி என். எதிர்வீரசிங்கம் இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து சம்பந்தப்பட்டோருடன் ஆராய்வார்.

மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளை இக்கூட்டத்தில் பங்குபற்றும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

# ஊவா மாகாணசபை பதவிக்காலம் முடிவு

கொழும்பு, ஜூன் 7

ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது. இன்னும் 7 தினங்களுக்குள் அடுத்த மாகாணசபைத்தேர்தலுக்குரிய வேட்பு மனுக்கள் கோருவதற்கு உரிய அறிக்கைகள் வெளியிடப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸநாயக்க அறிவித்துள்ளார். (இ-7)

## நிர்வாகத்தினர்.,.

(நாலாம் பக்கத் தொடர்)

பணிகளையும் முடித்த போதும் ஆலயச் சுற்றுமண்டபம் முழுமையாக நிறைவு பெறாதது எமக்கோர் மனக் குறையாக உள்ளது. எனினும் அனைவரினதும் பங்களிப்பும் எல்லாம்வல்ல ஞான வைரவப் பெருமானின் திருவருளும் கைகூடும் போது அனைத்துத் திருப்பணிகளும் நிறைவேறி பூரணமடையும் என்பது திண்ணம்.

பரிபாலன சபையினர்


# நாவலர் கல்வி நிலையம்

புலமைப்பரிசில் - '98

25 ஆவது பரீட்சை
07 - 06 - 98
ஞாயிறு காலை 9 மணி

நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.
(56677)


# இன்று பி. ப. 3 மணிக்கு

செல்லையா மெற்றாஸ்மயிலின்

## வேழம்படுத்த வீராங்கனை

(ஆட்ட நாட்டுக் கூத்து)

பிரதம விருந்தினர்:
**எஸ். எதிர்மன்னசிங்கம்**
உதவிப்பணிப்பாளர், வடக்கு — கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு)

சிறப்பு விருந்தினர்:
கலாநிதி சு. சிவலிங்கராசா
(தமிழ் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

இடம்: இந்து மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்: 07-06-1998 இன்று ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3 மணி (இலங்கை நேரம்)
அன்பளிப்பு: 50/- , 20/-

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

(56661)

# மரண அறிவித்தல்கள்

## காசியர் கந்தையா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட காசியர் கந்தையா அவர்கள் 5 6-98 இல் இறைபதம் எய்திவிட்டார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மதியழகன், மதிவாணன் (சுவிஸ்) மதிவதனராணி, உதயகுமார் (திருமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணசேகர், மாலா (சுவிஸ்), சாந்தி ஆகியோரின் மாமனாரும், கபில், கோபி, சிந்துதாரகன், சயந்தினி, அலோசியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7-6-1998 மதியம் 12 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
தங்கம்மா
(மனைவி)
மகன், மருமகள்

மானிப்பாய். (56679)

## திருமதி அன்னம்மா பாக்கியநாதர்

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா பாக்கியநாதர் 5-6-1998 அன்று காலமானார்.

அன்னார் பிரான்ஸ்சிஸ் பாக்கியநாதரின் அன்பு மனைவியும், நேசராணி, பவுலின்மேரிராணி (ஜேர்மனி), அருட்சகோதரன் ராஜசிங்கம், டியோஜினஸ் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரனிஸ்லஸ் (ஜேர்மனி) அவர்களின் மாமியாரும், டியோனா, யோனியல் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (8-6-98) திங்கட்கிழமை பி. ப. 3.30 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியுடன் இடம் பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பி.பாக்கியநரதர்
(கணவர்)

சென். ஜேம்ஸ்,
இளவாலை. (56686)

## திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர் 02 — 06 — 1998 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் சு. அம்பலவாணர் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி (ஆஸ்திரேலியா), சர்வானந்தன் (லண்டன்), விபுலானந்தன் (கனடா), சதானந்தன், இந்திராதேவி (ஜேர்மனி), சுலோஜனாதேவி, சத்தியானந்தன், கிருபானந்தன், சுமித்திராதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜதுரை (ஆஸ்திரேலியா), பிறேமலதா (லண்டன்), செல்வலதா (கொழும்பு), பொன்மலர், விஜயகுமாரி (ஜேர்மனி), விஜயரட்ணம், வசந்தி, சந்திரகாந்தா, உதயகுமார் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதிசீலன், குணசீலன், குகசீலன், சிவசீலன், சிவசக்தி, ருஷிக்கா, றோமேஸ், நிசாந்தன், றொசாந்தன், வர்சினி, நிருஜ, றஜீவன், சிறாணி சுஜீவன், டினேஸ்காந், சுஜானி, வினோச்காந், கிஷானி, டிலானி, துர்ஜகா, கீர்த்திகா, வேணுகா, டல்சினி, யரூஸ், சஜிதா, துளசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (08 — 06 — 1998) கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் இடம் பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. அம்பலவாணர்
(கணவன்)
(சட்டத்தரணி)

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (56691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு மருந்துகளை ஏற்றிக் கொண்டு கப்பல்

விடுதலைப் புலிகளுக்குத் தேவையான மருந்து வகைகளை ஏற்றிய கப்பல் ஒன்று நாட்டின் வடக்கு அல்லது கிழக்குக் கரையோரத்தை வந்தடையலாம் என மூத்த கடற்படை அதிகாரி ஒருவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடற்படையினரும், விமானப்படையினரும் தற்போது கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(இ-10-7)


ஏழாலை தெற்கு

**வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**

**விசாகப் பொங்கல் விழா**

காலம்: 8 – 6 – 98 திங்கட்கிழமை

காலை: 6. 00 மணிக்கு அபிஷேகம்

காலை: 8. 00 மணிக்கு பொங்கல்

காலை: 11. 00 மணிக்கு பூசை

நண்பகல் 12. 00 மணிக்கு அன்னதானம்

(56682) -- தேவஸ்தானம்

நாளை ஆரம்பம்

**விக்னா கல்வி நிறுவனம்**

**O/L DAY CLASS**

பிரிவு 3 8 00 — 2 00

கடந்த G.C.E. O/L பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எமது கல்வி நிறுவனத்திற்குப் பெருமை தேடித் தந்த மாணவர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

(56638)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி முன்னாள் லிகிதராகிய

திருமதி

**புனிதவதி செல்வராஜா**

அவர்கள் 02-06-98 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்

உடுவில் மகளிர் கல்லூரி.

(சி/3933)

**கண்ணீர் அஞ்சலி**

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்

திரு சேவியர் செல்வநாயகம்

அவர்களின் அன்புத் தந்தையார்

**சவிரிமுத்து யோசப்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறை வர்த்தகர் சங்கம்.

(56641)


## வாஜ்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)

வாகிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணி "கறுப்புப் பூனைகள்" என அழைக்கப்படும் பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-7-10)

## பிரபா..

(முதலாம் பக்கத் தொடர்)

தலைவருக்கும் இடையில் கடிதப் பரிமாற்றங்கள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதன் பின்னரே பிரபாகரனுடன் ஜனாதிபதி 44 கடிதங்களை பரிமாறிக் கொண்டதாகவும்—

பிரபாகரனிடம் வடக்கின் நிர்வாகத்தை 10 ஆண்டுகளுக்குக் கையளிக்கப்போவதாகச் செய்திகள் வெளியாகி இருந்ததாகவும் —

இது குறித்து ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் — கருணாசேன கொடித்துவக்கு தொலைக் காட்சியில் தெரிவித்திருந்தார்.

இத்தொலைக் காட்சிச் சேவையை நேரடியாகப் பார்த்த ஜனாதிபதி உடனடியாகவே கொடித்துவக்குடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரது கருத்துக்கு மறுப்புத் தெரிவித்தார்.

லியம்பொக்ஸின் முயற்சியினால் தனக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற கடிதப் பரிமாற்றங்கள் தொடர்பாக கருணாசேன கொடித்துவக்கு வெளியிட்ட தகவல்கள் தவறானவை எனவும் —

பிரபாகரனுடனான கடிதத் தொடர்பு தனக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் உடன்பாடு ஏற்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் இடம்பெற்றதாகவும்.

தனக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐ. தே. கட்சி சார்பில் சிலரை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு பல முறை அறிவித்திருந்ததாகவும், இதற்கு அவர் உரிய பதில் எதுவும் அளிக்கவில்லை என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(இ-7)


ஜிலானி தொலைத்தொடர்பு நிலையம்

காரைநகர் வீதி, சித்தன்கேணி.

உள்ளூர், வெளியூர்

நேரடித் தொலைத் தொடர்பு

(இரவு, பகல்)

சேவையை மேற்குறிப்பிட்ட நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜிலானி முகவர் தபால் நிலையம்,

யாழ்ப்பாணம்.

(சி/3691)


# ஈ. பி. ஆர். எல். எவ். கண்டனம் தெரிவிப்பு

யாழ். வர்த்தக சங்கத்தின் முன்னாள் செயலாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட உப தலைவருமான நமசிவாயத்தின் படுகொலையை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மர்மமான முறையில் யார் எவர் எனத் தெரியாத நிலையில் கொலைகள் நடக்கின்றன. இது மனித உயிரின் மதிப்பைக் குறைப்பது மட்டுமல்லாமல் சமூகத்தை பலத்தில் உறைய வைப்பதுமாக உள்ளது, இது சமூகத்தை சுய அழிவுக்கு இட்டுச் செல்லக் கூடியது.

இத்தகைய கொலைகள் நடப்பதை நிறுத்துவதற்கு எம்மால் ஆன அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வலைப்பந்தாட்ட போட்டி: யாழ். அணியினர் வெற்றி

திருகோணமலை, ஜூன் 7

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் நேற்று யாழ். மாவட்ட அணி திருகோணமலை மாவட்ட அணியை 35 க்கு 6 என்ற வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளது.

வடக்கு—கிழக்குமாகாணத்தில் மாவட்டங்களுக்கிடையில் நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி பல வருடங்களின் பின்னர் இப்போது தான் பங்குபற்றியது.

கடந்த பல வருடங்களாக மாவட்ட மட்டங்களுக்கிடையிலான போட்டிகளில் வடக்கு — கிழக்கு மாகாண சம்பியன்களாக வந்த திருகோணமலை மாவட்ட அணி இவ்வருடம் முதலாவது ஆட்டத்திலேயே யாழ். மாவட்ட அணியிடம் அதிக புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்றுப் போயுள்ளது.

திருகோணமலையில் இன்று நடைபெற உள்ள போட்டியில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோத உள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டுக்கழக அணி திருகோணமலைக்குச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொடுத்த யாழ். நகரத் தளபதி சுஸந்த மென்டிஸ், இம்முறை யாழ். மாவட்ட அணி வெற்றிக் கிண்ணத்துடன் திரும்பிவரும் என தாம் நம்புவதாக நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (இ-9)

## நமசிவாயம்..

(முதலாம் பக்கத் தொடர்)

துள்ளதாகப் பொலீஸார் கூறியதுடன் இது பற்றிய மேலதிக அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தமக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

இதனை ஏற்றுக் கொண்ட பதில் நீதிவான் க. கேசவன் மேலதிக விசாரணைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அதே சமயம் நமசிவாயத்துக்கு அஞ்சலி செலுத்து முகமாக நேற்று யாழ். நகரப் பகுதி வர்த்தகர்கள் தமது கடைகளை மூடியிருந்தனர்.

(இ-15-17-6-103-139-36)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

அத்தாக்குதலில் 10 புலிகள் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்திக் கொண்டு முன்னேறி வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-7-9)

## கருத்தரங்கு

யாழ். "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையம் நடத்தும் "தம்பதியர் உறவின் உளவியல்" கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாங்ஷால் வீதியிலுள்ள "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறும்.

## வேதாகம புதிர் போட்டி முடிவுகள்

கொழும்பு, ஜூன் 7

கொழும்பில் நேற்று நடைபெற்ற 34 ஆவது அகில இலங்கை 'வேதாகம புதிர் போட்டியில் சிரேஷ்ட பிரிவிலும் கனிஷ்ட பிரிவிலும் மொரட்டுவ. தூய இமானுவேல் ஆலயம் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

சிரேஷ்ட பிரிவில் இரண்டாவது இடம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்கும் —

கனிஷ்ட பிரிவில் இரண்டாவது இடம் சுண்டுக்குழி சென் ஜோன்ஸ் ஆலயத்துக்கும் கிடைத்தன.

சிரேஷ்ட பிரிவில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவருக்கான வெற்றிக்கேடயம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த லிடியா மிஷானி செபஸ்தியாம்பிள்ளைக்கும்—

கனிஷ்ட பிரிவில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவருக்கான வெற்றிக் கேடயம் சுண்டுக்குழி சென். ஜோன்ஸ் ஆலயத்தைச் சேர்ந்த போல் தர்ஷாந்த் சத்தியகுமாருக்கும் கிடைத்தன. (இ)


**BITSMANS INSTITUTES**

BITSMAN INSTITUTES BMI MANIPAY

MANIPAY

A/L 2000 கலை, வர்த்தக, கணிதம், உயிரியல்

| | | | | |
|---|---|---|---|---|
| ★ பொருளியல் ★ சண் | ★ தமிழ் ★ N பாலா | ★ அளவையியல் ★ R. P. சர்மா | ★ கணக்கீடு ★ N. ராஜன் | ★ பௌதிகம் ★ ஜெயசீலன் |
| ★ தூயபிரயோககணிதம் ★ ஐங்கரன் | ★ வணிகக்கல்வி ★ பிரபல ஆசிரியர் | நாடகமும் அரங்கியலும் கந்தவேள் | ★ கிறிஸ்தவம் ★ றெஜினோல்ட் | ★ இந்து நாகரிகம் ★ N. பாலா |
| ★ இரசாயனவியல் ★ ஜெயரூபன், சிவக்திரன | ★ உயிரியல் ★ ஞானேந்திரன், பாலா | ★ புள்ளிவிவரவியல் ★ தவசேகர் | புதிய பிரிவு ஆரம்பம்: 07–06–1998 ஞாயிறு 3.00 P.m | (55429) |


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத் அவர்களது பணிமனையில் 7–6–1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org